# TIRTHAPATI HIGH SCHOOL,

AMBASAMUDRAM.

## Selections from TAMIL POETRY.

(A GROUP)

923-24.

4 - AUG 1928

799

031,3x
N24

223265

உ

798
494.81186
1447

# திருக்குறள்.

## (கடவுள் வாழ்த்து)

1. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்,

## (வான்சிறப்பு)

3. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

4. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை.

5. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

6. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

## (வாழ்க்கைத்துணை நலம்)

7. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

031,1x N24

8. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

9. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

## புதல்வரைப் பெறுதல்.

10. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற

11. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

12. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

13. குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்.

14. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்·

15. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

16. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ்சொல்

## (அன்புடைமை.)

17. அன்பிலாரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

18. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்.

19. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.

20. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு.

## (இனியவை கூறல்.)

21. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.

22. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானா
மின்சொ லினதே யறம்.

23. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு.

24. பணிவுடைய னின்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப்பிற.

25. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி இனிய சொலின்.

26. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொ
வன்சொல் வழங்குவது. (லோ

27. இனியவுள வாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

## (செய்ந்நன்றி யறிதல்.)

28. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

29. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

30. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

31. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

32. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

33. கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக்கெடும்.

34. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

## (அடக்கமுடைமை.)

35. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

36. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூங் கில்லை யுயிர்க்கு.

2232265

37. எல்லார்க்கு நன்றும் பணிதல் அவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

38. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

39. யாகாவா ராயினு நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

40. தீயினாற் சுட்டபு ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு.

(ஒழுக்கமுடைமை)

41. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்

42. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

43. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி.

44. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பைதரும்.

45. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

46. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

## (பொறையுடைமை.)

47. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.

48. பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

49. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம்பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

50. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்.

51. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொ னோற்பாரிற் பின்.

## (வெஃகாமை)

52. நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

53 படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

54. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

55. அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு.

# வில்லி பாரதம்.

—

## பதினேழாம் போர்ச்சருக்கம்

### கண்ணபிரான் வேதியனாகி கன்னன் முன்வந்து கூறுதல்.

1. எத்தலங்களினுமீகையாலோ கைவாகையாலெதிரிலா வீரன்
மெய்த்தல முழுதுந் திறந்துகு குருதிவெயிலவன் கரங்கள்போலுகுப்ப
கொத்தலரலங்கன் மகுடமுங்கவச குண்டலங்களுமுருக்குலைந் துங் (க்
கைத்தலமறந்ததில்லை விற்குனிப்புங்கடுங்கணை தொடுத்திடுங்
(கணக்கும்.

2. அத்தவெற்பிரண்டு விற்கிடையெனப்போயாதபன் சாய்தல்
(கண்டருளி
முத்தருக்கெல்லா மூலமாய் வேதமுதற் கொழுந்தாகிய முதல்வன்
சித்திரச் சிலைக்கை விசயனைச்செரு நீயொழி கெனத்தேர் மிசை
(நிறுத்தி
மெய்த்தவப்படிவ வேதியனாகி வெயிலவன் புதல்வனை அடைந்தான்.

3. தாண்டியதரங்கக் கருங்கடலுடுத்த தரணியிற் றளர்ந்தவர் தமக்கு
வேண்டியதருதி நீயெனக்கேட்டேன் மேருவினிடைத் வம்பூண்டே
னீண்டியவறுமைப் பெருந்துய ருழந்தேனியைந் ததொன்றிக்கணத்
(தளிப்பாய்
தூண்டியகவனத்து ரகதத்தடந்தேர்ச்சுடர் தாத்தோன்றியதோன்றல்

4. என்றுகொண்டந்த வந்தணனுரைப்ப விருசெவிக்கமு தெனக்கேட்டு
வென்றிகொள்விசயன் விசயவெங் கணையான் மெய்தளர்ந்திரதமேல்
(விழுவோ
னன்றெனநகைத்துத் தாத்தருபொருணீநவில்கெனநான் மறையவனு
மொன்றியபடி நின்புண்ணியமனைத்தும் உதவுகென்ற லுமுளமகிழ்ந்
[தான்

5. ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை யகத்ததோ புறத்ததோ வறி
[யேன்
பாவியேன்வேண்டும் பொருளெலாநயக்கும் பக்குவந் தன்னில் வந்
[திலையா
லோவிலாதியான் செய்புண்ணியமனைத்துமுதவினேன் கொள்க நீ
(யுனக்குப்
பூவில் வாழயனு நிகரலனென்றாற் புண்ணிய மிதனி னும் பெரிதோ.

6. என்னமுன் மொழிந்து கரங்குவித்திறைஞ்ச விறைஞ்சலர்க் கெழிலி
[யேறனையான்
கன்னனையுவகைக் கருத்தினு னெக்கிக்கைப் புனலுடன் றருகெ!
(ன்ன
வன்னவனிதயத் தம்பின் வாயம்பாலளித் தலுமங்கை யாலேற்றான்
முன்னமோரவுணன் செங்கை நீரேற்றுமூவுலகமுமு டன் கவர்ந்
[தோன்

7. மல்லலந்தொடையனிருபனை முனிவன் மகிழ்ந்து நீவேண்டிய வரங்
[கள்
சொல்லுகவுனக்குத்தருது மென்றுரைப்பச்சூரன்மாமதலையுஞ்சொல்வா
னல்லல்வெவ்வினையாலின்னமுற்பவமுண்டாயினுமேழெழுபிறப்பு ?
மில்லையென்றுரைப்போர்க் கில்லையென்றுரையா விதய நீயளித்தரு
[ளென்றான்

8. மைத்துன் னுரைத்த வாய்மை கேட்டையன் மனமலருகந்து கந்தவ
[னைக்
கைத்தலமலரான் மார்புறத்தழுவிக்கண்மலர்க்கருணை நீராட்டி
யெத்தனை பிறவியெடுக்கினுமவற்றளீகையுஞ் செல்வ மூமெய்த்தி
முத்தியும் பெறுதி முடிவி லென்றுரைத்தான் மூவருமொருவனு.
(மூர்த்தி

9. போற்றிய கன்னன் கண்டுகெண்களிப்பப்புணரிமொண் டெழுந்த கார்
[முகிலை
மாற்றியவடிவும் பஞ்சவாயுதமும் வயங்குகைத்தலங்களுமாகிக்
கூற்றுறழ்கராவின் வாயினறழைத்த குஞ்சா ராசன்முனன்று
தோற்றியபடியே தோற்றினான் முடிவுந்தோற்ற முமிலாதபைந்து
[ளவோன்.

10. அமரரான விரும்மரயோனிகளுமமரருக்கதி பனானவனும்
கமலநான்முகனு முனிவருங்கண்டு கனகநாண்மலர் கொடுபணிந்தார்
சமரமாமுனையிற்றனஞ்சயன் கணையாற்சாய்ந்துயிர் வீடவுஞ்செங்க
ணமலநாரணனைக்காணவும் பெற்றேனென்று தன்னக மிகமகிழ்
[ந்தான்.

உ

# கம்பராமாயணம்.

## கிட்கிந்தா காண்டம்.

### வாலிவதைப்படலம்.

#### இராமனைப்பார்த்து வாலியுரைத்தல்.

1, கண்ணுற்றான் வாலி நீலக் கார்முகில் கமலம்பூத்து
மண்ணுற்று வரிவிலேந்தி வருவதே போலுமாலைப்
புண்ணுற்ற தனையசோரிப் பொறியொடும் பொடிப்பநோக்கி
எண்ணுற்றா யென்செய்தா யென்றேசுவா னியம்பலுற்றான்

2. வாய்மையு மரபுங்காத்து மன்னுயிர் துறந்த வள்ளற்
றூயவன்மைந்தனேநீபரதன் முன்றோன்றினாயே
தீமைதான் பிறரைக்காத்துத் தான்செய்தாற் றீங்கன்றாமோ
தாய்மையுமன்றி நட்புந்தரும மூந்தழுவிநின்றாய்

3. குலமிது கல்வியீது கொற்றமீதுற்று நின்ற
நலமிதுபுவன மூன்று நாயகமுன்ன தன்றோ
வலமிதிவ்வுலகந் தாங்கும் வண்மை யீதென்றா ற்றிண்மை
அலமரச்செய்யலாமோ வறிந்திருந் தயர்ந்துளார்போல்

4. கோவியற்றருமமுங்கள் குலத்துதித்தோர்கட்கெல்லாம்
ஓவியத்தெழுத வொண்ணாவுருவ த்தாயுடைமை யன்றோ
ஆவியைச்சனகன்பெற்ற வன்னத்தையமிழ் தின்வந்த
தேவியைப்பிரிந்தபின்னை திகைத்தனை போலுஞ்செய்கை

031, N24 223268



5. அரக்கரோரழிவுசெய்து கழிவரேலதற்கு வேறோர்
குரக்கினத்தரசைக் கொல்லமனு நெறிகூறிற்றுண்டோ
இரக்கமெங்கு குத்தாயென்பாலெப்பிழை கண்டாயப்பா
பரக்கழியிதுநீபூண்டாற் புகழையார் பரிக்கற்பாலார்.

6. ஒலிகடலுலகந்தன்னினூர் தருகுரங்கின்மாடே
கலியது காலம்வந்து பரந்ததோ கருணைவள்ளால்
மெலியவர்பாலதேயோ வொழுக்கமும் விழுப்பந்தானும்
வலியவர் மெலிவுசெய்தாற் புகழன்றி வசையுமுண்டோ

7. கூட்டொருவரையும்வேண்டாக் கொற்றவபெற்ற தாதை
பூட்டியசெல்வமாங்கே தம்பிக்குக்கொடுத்துப்போந்து
நாட்டொருக்கருமஞ்செய்தா யெம்பிக்கிவ்வரசை நல்கிக்
காட்டொருகருமஞ்செய்தாய் கருமந்தானிதின் மேலுண்டோ

8. அறைகழலலங்கல் வீரராயவர் புரிவதாண்மைத்ழி
துறையெனலாயிற்றன்றே தொன்மையினூற்கெல்லாம்
இறைவனீயென்னைச்செய்த தீதெனிலிலங்கை வேந்தன்
முறையலசெய்தானென்று முனிதியோ முனிவிலாதாய்

9. இருவர்போரெதிருங் காலையிருவரு நல்லுற்றாரே
ஒருவர்மேற் கருணைதூண்டியொருவர் மேலொளித்துநின்று
வரிசிலை குழையவாங்கி வாயம்பு மருமத்தெய்தல்
தருமமோபிறிதொன்றாமோ தருகிலதெனும் பக்கம்

வேறு.

வீரமன்று விதியன்றுமெய்ம்மையின்
வாரமன்று நின்மண்ணினுக் கென்னுடல்
பாரமன்று பகையன்றுபண்பொழிந்
தீரமன்றிது வென் செய்தவாறு நீ,

இருமைநோக்கினின்றி யாவர்க்கு மொக்கின்ற
அருமையாற்றலன்றோ வறங்காக்கின்ற
பெருமையென்பதிதென் பிழைபேணல்விட்
டொருமை நோக்கி யொருவர்க் குதவலோ.

செயலைச்செற்ற பகைதெறுவான்றெரிந்
தயலைப்பற்றித் துணையமைந்தாயெனின்
புய லைப்பற்றுமப் பொங்கரி போக்கியோர்
முயலைப்பற்றவ தென்ன முயற்சியோ.

காரியன்ற களங்க நிறத் தொன்மை
ஊரியன்றமதிக்குள தாமெனச்
சூரியன்மரபுக்கு மோர்தொன்மறு
ஆரியன் பிறந்தாக்கினை யாமரோ.

10. மற்றொருத்தன் வலிந்தறை கூவவந்
துற்றவென்னை யொளித்து யிருண்டநீ
இற்றையிற்பிறர்க்கும் மிகலேறென
நிற்றிபோலுங் கிடந்த நிலத்தரோ.

11. நூலியற்கையுநுங் குலத்துந்தையர்
போலியற்கையுஞ் சீலமும் போற்றலை
வாலியைப்படுத்தாயலைமன்னற
வேலியைப்படுத்தாய் விறல்வீரனே.

12. தாரமற்றொருவன் கொளத் தன்கையிற்
பாரவெஞ்சிலை வீரம்பழிப்பதே
நேருமன்று மறைந் துசிராயுதன்
மார்பினெய்யவோ வில்லிசல் வல்லதே.

13. என்றுதானுமெயிறு பொடிபடத்
தின்றுகான்று விழிவழித்தீயுக
அன்ற வாலியனையன கூறினான்
நின்றவீரனினைய நிகழ்த்தினான்.

## இராமன் வாலியைத்தான் கொலைபுரிந்தது நியாயமெனவுரைத்தல்.

14. பிலம்புக்காய் நெடுநாள் பெயராயெனாப்
புலம்புற்றான் வழிப்போதலுற்றான்றனைக்
குலம்புக்கான்றமுதியர் குறிக்கொணீ
அலம்பொற்றாரவனையரசென்றலும்.

15. வானமாளவென்றெம் முனைவைத்தவன்
தானுமாளக் கிளையினிறத்தடிந்
தியானுமாள்வெனிருந்தரசாள் கிலென்
ஊனமானவுரைபகர்ந்தீரென.

16. பற்றியாண்டபடைத்தலைவீரரும்
முற்றுணர்ந்த முதியருமன்பரும்
எற்றுநும்மரசெய்துவையாமெனக்
கொற்றநன் முடிகொண்டதக்கோதிலான்

17. வந்துவுன்னை வணங்கிமகிழ்ந்தனன்
எந்தையென்கணினத்தவராற்றலிற்
றந்தவுன்னரசென்றுதருக்கிலான்
முந்தையுற்றது சொற்றமுனிந்துநீ.

18. கொல்லலுற்றனையும்பியைச் சோதவற்
றில்லையென் பதுணர்ந்து மிரங்கலை
அல்லல்செய்யேனுனக் கபயம்பிழை
புல்லலென்னவும் புல்லலைபொங்கினாய்.

19 ஊற்றமுற்றுடை யானுனக் காமர்
தோற்றுமென்று தொழுதுயர் கையனைக்
கூற்றமுண்ணக் கொடுப்பனென் றெண்ணினாய்
நாற்றிசைக்கும் புறத்தையு நண்ணினான்.

20 அன்ன தன்மை யறிந்து மருளலை
பின்ன வனிவனிவனென்பதும் பேணலை
வன்னிதானிடு சாபவரம் புடைப்
பொன்மலைக் கவனண்ணலிற் போகலை.

21 ஈரமாவது மிற்பிறப் பாவதும்
வீரமாவதுங் கல்வியின் மெய்ந்நெறி
வாரமாவது மற்றொருவன் புணர்
தாரமாவதை தாங்குந் தருக்கதோ.

22 மறர்திறம் பல்வலிய மெனுமனம்
புறந்திறம்ப லெளியவர்ப் பொங்குதல்
அறந்திறம் பலருங்கடி மங்கையர்
திறந்திறம் பறெளிவுடை யோர்க்கெலாம்.

23 தருமமின்ன தெனுந்தகைத் தன்மையும்
இருமையுந் தெரிந்தெண்ணலை யெண்ணினால்
அருமை யும்பிதன் னாருயிர்த் தேவியைப்
பெருமை நீங்கினையெய்தப் பெறுதியோ.

24 ஆதலானும வனெனக் காருயிர்க்
காதலா னெனலானு நிற்கட்டனென்
எதிலாரு மெளிய ரென்றுரையும்
தீதுதீர்ப்ப தென்சிந்தைக் கருத்தரோ.

# கம்பராமாயணம்-பாலகாண்டம்.

## வேள்விப் படலம்.

### மாவலியின் கதை.

---

ஆனவனிங்குறைகின்ற வந்நாள்வாய்
ஊனமின்ஞால மொடுங்குமெயிற்றான்
ஏனமெனுந்திறன் மாவலியென்பான்
வானமும் வையமும் வௌவுதல்செய்தான். (1)

செய்தவம் வானவ நஞ்செயலாற்றா
றெய் தவழ்வேள்வியை முற்றிடநின்றான்
ஐயமில் சிந்தையனந்தணர் தம்பால்
வையமும் யாவும் வழங்கவலித்தான் (2)

ஆயதறிந்தனர் வானவரந்நாள்
மாயனை வந்துவணங்கியிரந்தார்
தீயவன் வெந்தொழிறீரென நின்றார்
நாயகனுமது செய்யநயந்தான். (3)

### வாமனாவதாரம்.

காலநுனித்துணர் காசிபனென்னும்
வாலறிவற்கதி திக்கொருமகவாய்
நீலநிறத்து நெடுந்தகைவந்தோர்
ஆலமர்வித்தி னருங்குறளானான். (4)

முப்புரிநூலினன் முஞ்சியன் விஞ்சை
கற்பதோர் நாவனனற் படுகையின்
அற்புத னற்புதவேறியுந்தன்
சிற்பதமொப்பதோர் மெய்க்கொடு சென்றான். (5)

அன்றவன் வந்ததறிந் துலகெல்லாம்
வென்றவன் முந்தி வியந் தெதிர்கொண்டான்
நின்றனினந்தணரில்லை நிறைந்தோய்
என்றனினுய்ந்தவர் யாரினி யென்றான். (6)

ஆண்டகையவ்வழி கூறவறிந்தோன்
வேண்டினற் வேட்கையின் மேற்படவீசி
நீண்டகையாயினி நின்னுழைவந்தோர்
மாண்டவரல்லவர் மாண்பிலரென்றான். (7)

சிந்தையு வந்தெதிரென்செய வென்றான்
அந்தணன் மூவடி மண்ணரு ளுண்டேல்
வெந்திறலா யிதுவேண்டுமெனுமுன்
தந்தனனென் றனன்வெள்ளி தடுத்தான. (8)

கண்ட திறத் திதனை தவமைய
கொண்டனிறக் குறளென் பதுகொள்ளேல்
அண்டமு முற்று மகண்டமு மேனுள்
உண்டவனு மிதுணர்ந் துகொ ளென்றான் (9)

நினக்கிலை யென்கை நிமிர்ந்திட வந்து
தனக்கியலா வகை தாழ்வது தாழ்வில்
கனக்கரியான துகைத் தலமென்னின்
எனக்கிதன் மேனலம் யாதுகொ லென்றான். (10)

துன்னினர் துன்னல ரென்பதுசொல்லார்
முன்னிய நன்னெறி நூலவர் முன்வந்
துன்னியதான முயர்ந்தவர்கொள்க
என்னினி வன்றனை யரவ ருயர்ந்தார். (11)

வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளியராக வழங்குதலல்லால்
எள்ளுவ வென்சில வின்னுயி ரேனும்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால். (12)

மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா
தேந்தியகை கொடுத்தவரேந்தாய்
வீய்ந்தவ ரென்பவர் வீய்ந்தவரேனும்.
ஈய்ந்தவ ரல்லதிருந்தவர்யாரே. (13)

அடுப்பவரும் பழிசெய்ஞ்ஞரு மல்லர்
கொடுப்பவர் முன்புகோ டேலென நின்று.
தடுப்பவ ரேபகை தம்மையு மன்னர்
கெடுப்பவரன்னதொர் கேடிலை யென்றான். (14)

கட்டுரையிற்றம கைத்துள போழ்தே
இட்டிசை கொண்டற னெய்தமு யன்றோர்
உட்டெறு வெம்பகை யாவது லோபம்
விட்டிடலென்று விலக்கினர் தாமே. (15)

வேறு.

எடுத்தொருவர்க் கொருவரீவதின் முன்னே
தடுப்பதுநினக் கிதழகோ தகைவில் வெள்ளி
கொடுப்பது விலக்கு கோடியோயுனது சுற்றம்
உடுப்பதுவு முண்பதுவு மின்றிவிடுகின்றாய். (16)

## வேறு.

முடிய விம்மொழி யெலாமொழிந் துமந்திரி
கொடியனென் றுரைத்த சொலொன்றுங் கொண்டிலன்
அடியொரு மூன்றுநீ யளந்து கொள்கென
நெடியவன் குறியகை நீரினீட்டினான். (17)

கயந்தரு நறும்புனல் கையிற் றீண்டலும்
பயந்தவர்களுமிசழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள பிசும்பினோங்கினான்
உயர்ந்தவர்க் குதவியவுதவி யொப்பவே. (18)

நின்றகான் மண்ணெலா நிரப்பியப்புறம்
சென்றுபா விற்றிலை சிறிதுபாரென
ஒன்றவானக மெலா மொடுக்கியும் பரை
வென்றகான் மீண்டது வெளி பெருமையே. (19)

உலகெலா முன்னடி யடக்கி யோரடிக்
கலகிலா தவ்வடிக் கன்பன் மெய்யதாம்
இலைகுலாந் துழாய் முடியேக நாயகன்
சிலைகுலாந் தோளினாய் சிறியன் சாலவே. (20)

உரியதிந் திறற்கிதென் றுலகமீர்ந்து போய்
விரிதிரைப்பாற்கடற்பள்ளி மேவினான்
கரியவ னுலகெலாங் கடந்த தாளிணை
திருமகள் கரந்தொடச் செவந்து காட்டவே. (21)

# நைடதம்.

(நளன் ஓர் அன்னத்தைப் பிடித்தான்.)

---

1. சூழ்வளியுடன் சுழல்சருகிற் றோன்றிய
ஆழ்வழி மனஞ்செல லுண்மையன் றுகொ
ரூழ்புலன் வழி மனஞ்சா ரவோ திமம்
பாழிபந் தோளினான் கையிற் பற்றினான்.

2. கைப்படு சிறையனங் கலங்கிவாய் வெரீஇத்
துப்புறழ் தோவடி துடிப்பத் துன்பமுற்
றெய்ப்பொடு சிறையடித் தேகலாமையின்
மைப்புய லனைய கைம்மலரிற் கொத்திற்றால்.

3. இரைத்தயர் புள்ளினுக் கிரங்கிப் புட்குலம்
விரித்தெழு சிறைவளி வீசமெல் லிதழ்த்
திருத்தகு தாமரை யலைதல் சேர்தடம்
வருத்தலை யென்றுகைம் மறித்தல் போன்றதே.

4. வள்ளவாய்த் தாமரை வதிந்து போதரு
புள்ளெலாந் தனித்தனி புலம்பல்வாவியி
னுள்ளுறு வறுமை கண்டொதுங்கு பூமக
டெள்ளரிச் சிலம்புகள் சிலம்பல் போன்றதே.

5. இன்னபொன் னிறையனங் கண்டிலேனெனு
மன்னர் மன்னவன் மதிவதன நோக்கியே
பன்னவன் கரமல ரமர்ந்த வோதிம
நன்னய மொழிசில நவிற லுற்றதே.

6. சிறையொளிர் பொன்னிறை செல்வநல்குமோ
வறைகடல் பணியினி னிறைவதாங் கொலோ
கறைகெழு வேலினுக் கருத்தி னுள்ளுற
நிறைதரு விழைவினை நீத்தல் வேண்டுமால்.

7. கோறல்செய்தா லுயிர்க்கொலை யொன்றேயலாற்
றேறினர்ப் பிழைத்தவன் பழியுஞ் சேருமாற்
றூறுபாய் கவுண் மதத்தறுகண் யானையாய்
மாறுகொள் பகைஞர்க்குமி துமனங் கொளார்.

8. கல்வியி னகன்றிடு கருணை வேந்துளத்
தொல்கலுங் கருணையு முவப்புந் தோன்றிட
வல்கலின் மொழிசில வரைந்து பின்னரும்
பல்பல துடர்மொழி பகர லுற்றதே.

9. பெருகிய மூப்பினிற் றளர்ந்து பேதுறு
மிருமுது குரவருமென் செய்கிற்பரோ
கருவுயிர்த் தயர்வுறு காதற் பேடையுள்
ளுருகு மேயெனநெட்டுயிர்ப்பு வீங்கிற்றே.

10. அன்னைமூப்பழிதாவார் கொலாற்றுவார்
மன்னனைற் படுத்தலும் வெருவிவாவியிற்
றுன்னியாங் கிருந்தபுள் சொற்றபோழ் தினி
வின்னலங்கட லுலாழ்ந் திறக்குமே கொலாம்.

11. புல்லுவிட்டஞ் சிறைநெகி ழினும்பெரு
தல்லல்கூர் பெடையவர் யாக்குற் ருரெனிற்
சொல்லரும்புட் குலங்கலுழுந் துன்பமாய்ந்
தெல்லை யிறுயரொடு மிறக்குமே கொலாம்.

12. அனிச்சமென் மலரினு நொய்யவாய் சிறைத்
தனிப்பெடை யமைக்குமென் றளிர்க்கை யாலயன்
றுனிப்படு பிரிவெனுஞ் சுடுசொலென் றலை
நினைத்துமுன் னெவ்வண நிலவக்கோட்டினன்.

13. வீழுமெற் படுத்தவிக் கொ[illegible]
தாழ்சிறை மடப்பெடை செவியிற் சார்தலு
மாழ்துயர்க் கடலிடை யாழ்ந்தி யானிலாப்
பாழ்படு திசையெலா மருண்டு பார்க்குமே.

14. பிரிவெனு மழல்சுடப் பெடையிறக்குமே
யரிதினிற் பெற்றவெம் பார்ப்பெலா மயர்ந்
திரைபெருக் குடம்பை யுளாற்றி யெய்திய
பிரிவினிற் சாமெனப் பதைத்துச்சோர்ந்ததே.

15 அளிக்கொரு கடலனன தலைக்கண்டுகண்
டுளித்திடு தண்புனற் றுவலை வீழ்தலிற்
றளிர்த்தமென் சிறையனந் தளர்வு நீங்கியுட்
களித்து காவலன் கருணை நோக்கியே.

16, ஆகுலத் துடன்மட வனத்தை நோக்கிநின்
சேகுரு பொன்னிறச் சிறகர் நோக்குறு
மோகமே பிடித்தனன் முழுதுநோக்கின
னேகுழியேகெனவிறை விடுத்தனன்.

2232265